**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**நாள்: 09.08.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா, உலகின் 3ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக விரைவில உருவெடுக்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், 3 நாள் அரசுமுறைப் பயணமாக மாலத்தீவு சென்றுள்ளார்.

புதுச்சேரியில், 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், குளங்கள் தூர்வாரி ஆழப்படுத்தப்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான மல்யுத்த போட்டியில், இந்தியாவின் அமன் ஷெராவத், புர்த்தோ ரிக்கோவின் தரியன் க்ரூஸ்-உடன் மோத உள்ளார்.

--------------------------------

குடியரசுத் தலைவர் (16)

இந்தியா, உலகின் 3ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக விரைவில் உருவெடுக்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இன்று ஆக்லாந்தில், இந்திய வம்சாவளியினர் மற்றும் இந்தியாவின் நண்பர்கள் சமூக அமைப்பு அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு கூறினார்.

நியூசிலாந்து, தமது நிபுணத்துவம் மற்றும் அனுபவம் மூலம் இந்தியாவிற்கான வளர்ச்சியில் அந்நாட்டின் பங்களிப்பை வழங்கி வருவதாகவும், குறிப்பாக கல்வித்துறையில் இத்தகைய பங்களிப்பை வழங்கி வருவதாக தெரிவித்தார்.

தீபாவளி, ஓணம், ஹோலி, மற்றும், பொங்கல் உள்ளிட்ட இந்திய பண்டிகைகள் நியூசிலாந்தில் கொண்டாடப்படுவதற்கு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய திருமதி முர்மு, நம்நாட்டு பண்டிகைகள், பாரம்பரியம் மற்றும் பழக்க வழக்கங்களை நியூசிலாந்தில் உயர்த்திப் பிடிப்பதற்காக இந்திய வம்சாவளியினரை பாராட்டினார்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன், மக்களவை உறுப்பினர்கள் ஜுகல் கிஷோர் ஷர்மா, சௌமித்ரா கான், இந்திய தூதர் நீட்டா பூஷன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------------

ஒத்திவைப்பு (16)

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் சென்ற மாதம் 22ஆம் தேதி துவங்கி நடைபெற்று வந்தது. 15 அமர்வுகளாக

நடைபெற்ற இந்த கூட்டத் தொடரில், 115 மணி நேரங்கள் அவை நடவடிக்கைகள் நடைபெற்றதாக மக்களவை தலைவர் திரு. ஓம். பிர்லா தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் 2024-25ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை சென்ற மாதம் 23ஆம் தேதி தாக்கல் செய்தார் என்று தெரிவித்துள்ள மக்களவைத் தலைவர், இந்த பட்ஜெட் மீதான விவாதங்கள், சுமார் 27 மணி நேரம் நடைபெற்றன என்றும், 12 மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், அவற்றில் 4 மசோதாக்களுக்கு மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மாநிலங்களவையில், சுமார் 22 மணி நேரம் பட்ஜெட் மீதான விவாதங்கள் நடைபெற்றதாகவும், 90 மணி நேரங்கள் மாநிலங்களவை அமர்வு நடைபெற்றதாகவும், அவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

வரும் திங்களன்று நிறைவு பெற இருந்த இந்த கூட்டத் தொடர்கள் இன்றே ஒத்தி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

--------------------------------

ஜெய்சங்கர் (7)

வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், 3 நாள் அரசுமுறைப் பயணமாக மாலத்தீவு சென்றுள்ளார். இந்தியா மற்றும் மாலத்தீவு இடையேயான, வலுவான கூட்டாண்மை மற்றும் இருதரப்பு உறவுகளின் மேம்பாடு தொடர்பாக இந்த பயணம் அமைந்துள்ளது.

சமீபத்தில், 3ஆம் முறையாக மத்திய அரசு பதவியேற்ற நிகழ்ச்சியில், மாலத்தீவு அதிபர் திரு. முகமது முய்சு பங்கேற்றதை தொடர்ந்து, இந்த பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

--------------------------------

*அஷ்வினி – மக்களவை (5)*

ரயில்வேயின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கு வகை செய்யும், சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இதனை தாக்கல் செய்து பேசுகையில், ரயில்வே வாரியத்திற்கு கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

--------------------------------

*வஃக்பு வாரியம்* (9)

வக்ஃபு வாரியம் சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற்கான குழு அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இதற்கான தீர்மானத்தின்படி, இந்த குழுவில், 21 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அடுத்த கூட்டத் தொடரின் முதல் வாரத்தின் கடைசி நாளில், இந்த குழு அறிக்கையை தாக்கல் செய்யும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

மாநிலங்களவையில் இருந்தும், திரு. பிரிஜ்லால், திரு. சஞ்சய் சிங், திரு. ராதா மோகன்தாஸ் அகர்வால் உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் கூட்டு நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

--------------------------------

*சிசோடியா (8)*

ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் திரு. மணீஷ் சிசோடியாவிற்கு உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கி உள்ளதை அக்கட்சி வரவேற்றுள்ளது.

இதுகுறித்து புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் தலைவர் திரு. சஞ்சய் சிங், இந்த தீர்ப்பு நாட்டின் சட்ட அமைப்பு மற்றும் ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொது செயலாளர் திரு. D. ராஜா, திமுக மக்களவை உறுப்பினர் திருமதி கனிமொழி மற்றும் எதிர்கட்சித் தலைவர்கள் சிலரும், திரு. சிசோடியாவிற்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

-------------------------------

*சட்டப் ே□ரவை 1 (16)*

புதுச்சேரியில், கலால் சட்ட விதிகளின்படி, மதுபான கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

கேள்வி நேரத்தின் போது, பிஜேபி உறுப்பினர் திரு. கல்யாண சுந்தரம் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்து பேசிய திரு. ரங்கசாமி, புதுச்சேரியில், மதுபானக் கடைகள் அமைப்பதற்கும், இடமாற்றம் செய்வதற்கும், கலால் சட்ட விதிகள் 1970-ன்படி, அனுமதி வழங்கப்படுவதாக, தெரிவித்தார்.

காலாப்பட்டு தொகுதியில் மத வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்களின் அருகே, இந்த விதியின்கீழ் செயல்படும் மதுக் கடைகளை அகற்றும் சூழ்நிலை அரசுக்கு ஏற்படவில்லை என்றார்.

புதுச்சேரி, கலால் துறை வருவாயை நம்பி உள்ளதாகவும், கடந்த ஆண்டில், கலால் துறை மூலம் ஆயிரத்து 485 கோடி ரூபாய் வருவாய் கிடைத்ததாகவும்,

தற்போது இந்த வருவாயை ஆயிரத்து 600 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டிய சூழலில் அரசு உள்ளதாகவும் தெரிவித்தார்.

வேறு ஒரு கேள்விக்கு பதில் அளித்து பேசிய பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், படுகை அணை கட்டும் பணிக்கான

*சட்டப்□ரவை 2 (14)*

ஒப்பந்தப்புள்ளி அதற்கான ஒப்புதல் கிடைத்தவுடன் கோரப்படும் என்றும், இந்த ஆண்டே பணிகள் தொடங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், குடிநீர் தேவைக்காக புதுச்சேரியில் உள்ள 85 ஏரிகளில், 55 ஏரிகள் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தூர்வாரி ஆழப்படுத்தப்பட உள்ளதாகவும் கூறினார்.

அப்போது குறிக்கிட்டு பேசிய முதலமைச்சர் திரு. ரங்கசாமி, புதுவை மக்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்க, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் குளங்கள் தூர்வாரி ஆழப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

என்.ஆர்.காங்கிரஸ் உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, அரியாங்குப்பம் முதல், மரப்பாலம் வரை, நாள்தோறும் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாண வேண்டும் என்று கோரினார்.

அதற்கு பதில் அளித்த உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், 3 கோடியே 82 லட்சம் ரூபாய் செலவில், கடலூர் சாலையை அகலப்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், விரிவாக்கப் பணி விரைவில் தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

*சட்டப்பேரவை 3 (12)*

மேலும், புதுச்சேரியின் மற்ற பகுதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாண அரசு பல்வேறு நடவடிக்கைககளை எடுத்து வருவதாகவும் அமைச்சர் திரு. நமச்சிவாயம் தெரிவித்தார்.

அவையில் பேசிய திமுக உறுப்பினர் திரு. நாஜிம், மாநிலத்தில் உள்ள கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்களுக்கு, மானிய விலையில் மின்சார கட்டணம் வழங்க அரசு முன்வருமா என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் திரு. நமச்சிவாயம், இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி, வழிபாட்டு தலங்களின் மின்சார கட்டணம், வீட்டு உபயோகத்திற்கான கட்டணப் பிரிவில் வசூலிக்கப்படுவதாகவும், 100 யூனிட் பயன்பாட்டிற்கு கீழ் வரும் வீட்டு உபயோக நுகர்வோருக்கு, 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படுவதாகவும், இதுவே வழிபாட்டு தலங்களுக்கும் பொருந்தும் என்றார்.

-------------------------------

*சட்டமன்றம் – மாணவர்கள் (8)*

புதுச்சேரி நடப்பு சட்டப் பேரவையின் கூட்டத் தொடரின் 8ஆம் நாளான இன்று, சட்டப் பேரவை நிகழ்வுகளை பார்வையிட வந்த காரைக்கால் மாவட்ட அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, புத்தகங்களை பரிசாக வழங்கி வாழ்த்தினார்.

சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. PRN. திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏஎம்ஹெச். நாஜிம், திரு. நாக தியாகராஜன், கல்வித் துறை இணை இயக்குநர் திருமதி சிவகாமி உள்ளிட்டோர் நிகழ்ச்சியின் போது உடன் இருந்தனர்.

--------------------------------

*விமானம்* (7)

ஏர் இண்டியா டெல் அவைவ், இஸ்ரேலுக்கான தனது விமான சேவையை ரத்து செய்துள்ளது.

மேற்கு ஆசியாவில் நிலவும் தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு, அடுத்த அறிவிப்பு வரும் வரை, இந்த சேவைகள் உடனடியாக நிறுத்தப்படுவதாக, ஏர் இண்டியா தெரிவித்துள்ளது.

நிலைமைகளை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், பயணிகள் மற்றும் விமான ஊழியர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக, ஏர் இண்டியா தெரிவித்துள்ளது.

--------------------------------

*ஒலிம்பிக் (3)*

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில், வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீரர் நீரஜ் சோப்ராவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------------------------

*ஒலிம்பிக் – மல்யுத்தம்* (5)

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில், இந்திய நேரப்படி இன்றிரவு 9.45 மணிக்கு நடைபெற உள்ள 57 கிலோ ஃபிரி ஸ்டைல் ஆடவர் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் அமன் ஷெராவத், புர்த்தோ ரிக்கோவின் தரியன் க்ரூஸ்-உடன்

மோத உள்ளார். இந்த போட்டியில் வெற்றி பெறுபவர் வெண்கலப் பதக்கம் வெல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

--------------------------------

*வானிலை (12)*

கடந்த 24 மணி நேரத்தில், வடதமிழக மற்றும் தென்தமிழக மாவட்டங்களின் அநேக இடங்களிலும், தென்தமிழக கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

விழுப்புரத்தில் 18 செ.மீட்டரும், கடலூர், புதுச்சேரியில் தலா 11 செ.மீட்டரும், மழை பதிவாகி உள்ளது.

திருக்கோவிலூர், மானாமதுரையில் தலா 9 செ.மீட்டரும், சிதம்பரம், திண்டிவனம், திருக்கனூர் உள்ளிட்ட இடங்களில் தலா 8 செ.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மணிக்கு 30-ல் இருந்து 40 கிலோ மீட்டர் வேகத்தில், இடி, மின்னலுடன் கூடிய பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியா, உலகின் 3ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக விரைவில் உருவெடுக்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், 3 நாள் அரசுமுறைப் பயணமாக மாலத்தீவு சென்றுள்ளார்.

புதுச்சேரியில், 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், குளங்கள் தூர்வாரி ஆழப்படுத்தப்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான மல்யுத்த போட்டியில், இந்தியாவின் அமன் ஷெராவத், புர்த்தோ ரிக்கோவின் தரியன் க்ரூஸ்-உடன் மோத உள்ளார்.